[1981 மார்ச் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 379 மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

பஞ்சாயத்து யூனியன்களில் ஒருங்கிணைந்த பருத்தி பெருக்குத் திட்டம்

*வினா எண். 380—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஐ.சி.டி.எஸ். திட்டம் நமது மாநிலத்தில் எத்தனை யூனியன்களில் அமுல் நடத்தப்படுகின்றது?

(ஆ) இதற்கு மத்திய அரசின் உதவி எவ்வளவு கிடைக்கின்றது?

(இ) இந்தத் திட்டத்தை மாநிலத்திலுள்ள எல்லா யூனியன்களிலும் அமுல் நடத்த அரசிற்கு உத்தேசம் உண்டா?

(ஈ) ஆம் என்றால், எப்போது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஒருங்கிணைந்த பருத்தி பெருக்குத் திட்டம் (ஐ.சி.டி.எஸ்.) நமது மாநிலத்தில மொத்தம் 126 பஞ்சாயத்து யூனியன்களில் அமுல் நடத்தப்பட்டுள்ளது.

(ஆ) மத்திய அரசு உதவி ஏதுமில்லை.

(இ) அவற்றிற்கான உத்தேசம் ஏதுமில்லை.

(ஈ) இக்கேள்விக்கு இடமில்லை.

குடுமியான்மலையில் விவசாயக் கல்லூரி.

*வினா எண். 381—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை அண்ணா பண்ணையில் விவசாயக் கல்லூரி அமைப்பது சம்பந்தமாக விழா நடத்தி பணமுடிப்பு வழங்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) தற்போது விவசாயக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் உண்டா?

1981 மார்ச் 5]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) இல்லை.

[முற்பகல் 9-10]

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மக்களுடைய நீண்டகால விருப்பமான விவசாயக் கல்லூரியை அங்கே அமைக்க மறு பரிசீலனை செய்யப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, புதிதாக விவசாயக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை. ஆனால், குடுமியான்மலையில் 96 லட்சம் ரூபாய் செலவில் பல பயிற்சிகள் அளிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயருக்கு மேலும் சிறப்பும், புகழும் சேர்க்கும் வகையில் அங்கே விவசாயக் கல்லூரியை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதைக் கருத்திலே கொண்டுதான் அங்கே பல பயிற்சிகளை அளிக்கும் திட்டம் ஆய்வில் இருக்கிறது.

திருப்பத்தூர் நகரை அழகுபடுத்துதல்.

* வினா எண். 382—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகரத்திலுள்ள சாலைகளை அகலப்படுத்தி திருப்பத்தூர் நகரை அழகு படுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இந்தத் திட்டம் பற்றி திருப்பத்தூர் நகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS